மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்
அசல் வழக்கு எண். 73/2021

**2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW-2 வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமச்சந்திரன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : ராமலிங்கம் | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : பேரளி | சமயம் | : - |
| சாதி | : - | வயது | : 53/2022 |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. சந்திரமதி என்பவர் பட்டாவில் எனது பெயர் இருப்பதாக சொல்லி கையெழுத்து போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதின் பேரில் 2007 ஆம் ஆண்டு நான் கையெழுத்து செய்து கொடுத்த பத்திரம் என்னவென்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை அது பற்றி எனக்கு தெரியாது. நான் பத்திரத்தில் கையெழுத்து செய்து கொடுத்த பிறகு சந்திரமதி வருவாய்த்துறையினரிடம் மனு கொடுத்து அதன் பேரில் வருவாய்த்துறையினர் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

2. நான் சந்திரமதிக்கு 11.10.1995 ம் தேதிமூன்று சர்வே எண்களில் 2 ஏக்கர் நிலத்தினை விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான் அந்த 3 சர்வே எண்களுக்கும் நான்கெல்லை சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

Taken court by in open court read
and to the witness and admitted by
the witnesses to be correct.

District Munsif-cum-Judicial
Magistrate, Kunnam.

DMC KUNNAM